மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

நிகழ்நிலைப் பரீட்சை – 05

வினாத்தாள் - I

சுட்டெண் :-	தரம் - 5	நேரம் : 1 மணித்தியாலம்

மாணவர்களைப் பாடசாலைக்குத தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத் தாளிலேயே எழுதுக.(சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன)
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும். (பயன்படுத்தவும்)

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டு புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T


www.ikeduk.lk

➢ **01ம், 02ம் வினாக்களில் வேறுபட்ட தொடர்புடைய உருச் சோடியைத் தெரிவு செய்க.**


01.



(1)




(2)




(3)


02.



(1)




(2)



(3)

➢ **03, 04 ஆகிய வினாக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.**



03. பகலில் குளம் காணப்படும் இடத்தில் நடமாடும் பறவையையும், இரவில் நடமாடும் விலங்குண்ணிப் பறவையையும் முறையே காட்டும் எழுத்துக் கூட்டம்

1) B உம், E உம் 2) E உம், A உம் 3) B உம், D உம்

04. ஒன்றோடு ஒன்று சினேகபூர்வமாக இருப்பதற்கு வாய்ப்பற்ற சந்தர்ப்பங்களைக் கொண்ட பிராணிகளை காட்டும் எழுத்துக் கூட்டம்

1) D உம், E உம் 2) A உம், C உம் 3) A உம், B உம்

➢ **சொற்கள் அமைந்துள்ள கோலத்திற்கேற்ப 05, 06 ஆகிய வினாக்களுக்கான விடைகளைத் தெரிவு செய்க.**


05. ஆகாயம், காவியம், விவாதம், ... , ...

1) வாசகம், சட்டம் 2) வாக்கியம், கட்டடம் 3) வசனம், சமயம்


06. கட்டில், கிழங்கு, குடம்பி, ... , ...

1) கெட்டது, கைலாசம் 2) கூட்டம், கேசரம் 3) கூவியது, கெட்டது


07. கீழே தரப்பட்டுள்ள கோலம் தொடர்ந்து செல்லும்போது 4ம் இடத்தில் வரத்தக்க உருவைத் தெரிவு செய்க.



.....




(1) (2) (3)


08. 

கீழே தரப்பட்டுள்ள சதுரமுகியை அமைப்பதற்கு 27 சிறிய சதுரமுகிக் குற்றிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெரிய சதுரமுகியின் விளிம்புகளின் நீளங்களின் கூட்டுத்தொகையாக அமையாதது

1) 108cm
2) 72cm
3) 84cm

09. சதுர வடிவக் கடதாசியானது உருவில் காட்டியவாறு புள்ளிக்கோடுகள் வழியே மடித்து C இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிழற்றிய பகுதி வெட்டி நீக்கிய பின் விரிக்கும்போது தோன்றும் சரியான வடிவத்தைத் தெரிவு செய்க.





(1) (2) (3)

www.lkedu.lk

➢ **கீழே தரப்பட்டுள்ள தரவைப் பயன்படுத்தி 10, 11 ஆகிய வினாக்களுக்கு விடைகளைத் தெரிவு செய்க.**

■ + □ = 21

□ - ■ = 03

□ + △ = 17 எனின்,

10. △ இவ்வுருவில் பெறுமதி யாது?

1) 7 2) 5 3) 4

11. உருக்களின் பெறுமதிக்கேற்ப இறங்குவரிசைப்படுத்தினால் வருவது

1) △ ■ □ 2) ■ □ △ 3) □ ■ △

12. 2021 ஆம் ஆண்டில் கமலனின் அப்பா தனது மணி விழாவைக் கொண்டாடினார். அப்போது கமலனுக்கும் அவனது அப்பாவிற்கும் இடையிலான வயது வித்தியாசம் 40 ஆகும். கமலனுக்கு 10 வயது இருக்கும்போது அவனது அப்பாவின் வயது எத்தனை?

1) 40 2) 50 3) 60


13. 2, 5, 7, 3 ஆகிய நான்கு இலக்கங்களையும் வைத்து உருவாக்கக்கூடிய நான்கிலக்க எண்கள் எத்தனை?

1) 14 2) 20 3) 24


14. ஒரு நிரையில் கத்தரி, வெண்டி, தக்காளி, மிளகாய் என்ற ஒழுங்கில் 105 செடிகள் உள்ளன ஆயின் இந்நிரையிலுள்ள கத்தரி, மிளகாய் செடிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

1) 52 2) 53 3) 55


15. கீழே தரப்பட்ட இரண்டு உருக்கள் ஒரு பொதுவான பண்பினைக் காட்டுகின்றன. அவ்வாறு பண்பினைக் காட்டாத உருவைத் தெரிவு செய்க.



(1)



(2)



(3)

16. அருகருகே அமைந்துள்ள 5 முழு எண்களின் கூட்டுத்தொகை 55 எனின், அந்த 5 எண்களுள் மிகச்சிறிய எண் யாது?


1) 9 2) 8 3) 10


17. ''நாளை மறுதினம் எனக்குப் பிறந்த நாள்'' என மாணவன் ஒருவன் நேற்று ஆசிரியரிடம் கூறினான். இன்று சனிக்கிழமை எனில், மாணவனின் பிறந்த நாள் எது?

1) வெள்ளிக்கிழமை 2) ஞாயிற்றுக்கிழமை 3) திங்கட்கிழமை

www.lkedu.lk

➢ **அடைப்பினுள் உள்ள தொடர்பை நன்கு அவதானித்து 18, 19 ஆகிய வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.**





18. 


நிழற்றப்பட்ட பகுதியின் பெறுமதியாக அமைவது

1) 5
2) 10
3) 20

19. 25 + 15 என்பதனை காட்டும் சரியான உரு


(1)



(2)



(3)


20. ஒரு பெட்டியில் 8 சிவப்புநிற மாபிள்களும் 7 கறுப்பு நிற மாபிள்களும் 6 நீல நிறமாபிள்களும் இருந்தன. எழுமாறாக ஒருமாபிளை எடுக்கும்போது அது நிச்சயமாக கறுப்பாக இருக்க வேண்டுமெனின் ஆகக் குறைந்தது எத்தனை மாபிளை வெளியே எடுக்க வேண்டும்?


1) 15 2) 16 3) 14


➢ **21 ஆம், 22 ஆம் ஆகிய வினாக்களில் வெற்றிடத்திற்கு பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.**


21. 



(1)



(2)


(3)


22. 


(1)


(2)


(3)

www.ikedu.lk


23. 

அருகில் உள்ள உருவானது 7 தீக்குச்சிகளை பயன்படுத்தி அமைக்கப் பட்டுள்ளது. இம்முறையில் ஒரே வரிசையில் 10 முக்கோணிகளை அமைப்பதற்கு தேவைப்படும் தீக்குச்சிகளின் எண்ணிக்கை யாது?

1) 23 2) 21 3) 13


24. தரப்பட்டுள்ள உருவில் வட்டத்திற்கு நீல நிறமும் சதுரத்திற்கு மஞ்சள் நிறமும் தீட்டும்போது A பகுதியில் தோன்றக் கூடிய நிறம் எது?

1) பச்சை
2) கருநீலம்
3) ஊதா



➢ **உண்டியலொன்றில் இருந்த நாணயங்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களை வரைபு காட்டுகின்றது. அதனை நன்கு அவதானித்து 25, 26 ஆகிய வினாக்களுக்கு விடைகளைத் தெரிவு செய்க.**

(உண்டியலில் உள்ள 2 ரூபாய் நாணயங்களின் பெறுமதி 16 ரூபாய் ஆகும்.)




25. உண்டியலில் உள்ள 10 ரூபாய் நாணயங்களின் பெறுமதியாக அமைவது

1) 80 ரூபாய் 2) 60 ரூபாய் 3) 40 ரூபாய்

26. உண்டியலில் உள்ள மொத்தப் பணம் எவ்வளவு?

1) 108 ரூபாய் 2) 96 ரூபாய் 3) 84 ரூபாய்


27. கீழே உள்ள உருவில் ஒரேயளவான மூன்று சிறிய செவ்வக வடிவமான அட்டைகள் காட்டப்பட்டுள்ளன. சிறிய செவ்வக வடிவ அட்டை ஒன்றின் அகலம் 3cm ஆகும். அதன்படி இவ்வுருவைச் சுற்றியுள்ள நீளம் யாது?



1) 27cm
2) 30cm
3) 32cm


www.ikeduLK

28. ஒரே நீள, அகலமுள்ள 3 செவ்வகத்தகடுகளில் இருந்து உருவில் உள்ளவாறு நிழற்றிய பகுதிகள் நீக்கப்படுகின்றன. இப்போது மீதியாக உள்ள பகுதியின் சுற்றி வரவுள்ள நீளம், முன்னர் இருந்த தகட்டின், சுற்றிவரவுள்ள நீளம் கூடிய உரு எது?



(1) (2) (3)

29. உருவில் நிழற்றப்படாத சதுரங்களின் எண்ணிக்கை யாது?



1) 6
2) 7
3) 8

30. 2020ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை எனின், 2022ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி என்ன கிழமையாக இருக்கும்?

1) செவ்வாய்க்கிழமை 2) புதன்கிழமை 3) வியாழக்கிழமை

31. பின்வரும் எழுத்துக்களை முகம் பார்க்கும் கண்ணாடியூடாகப் பார்க்கும்போது எவ்வித மாற்றமும் இன்றித் தோன்றும் எழுத்துக்கூட்டம்

MNKWSHU

1) **MWHU** 2) **MNHW** 3) **MKSU**

➢ **32, 33 ஆகியவினாக்களில் தரப்பட்டுள்ள எண்கோலத்தை அவதானித்து இடைவெளியில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.**

32.


1 , 2 , 2	**3 , 12 , 4**	**5 , 30 , ...**

1) 6 2) 8 3) 9

33. 11, 2, 13, 3, 16, ... , ...

1) 4 , 22 2) 5 , 20 3) 4 , 20

➢ **கீழே தரப்பட்ட வென்வரிப்படத்தை நன்கு அவதானித்து 34, 35 ஆகிய வினாக்களுக்கு விடைகளைத் தெரிவு செய்க.**



காட்டு விலங்கு, நாய், உயிரினங்கள், மான் என்பவற்றிற்கிடையிலான தொடர்பினை அருகில் உள்ள உரு காட்டுகின்றது.


34. நாய் என்பதனை குறிப்பிடும் எழுத்தாக அமைவது


1) B 2) C 3) D

35. C குறிக்கும் சொல்லிற்கு மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய வேறொரு சொல்


1) சிங்கம் 2) பசு 3) காகம்

36. கீழே தரப்பட்டுள்ள வலையுருவில் அ தொடக்கம் ஊ வரை எழுதப்பட்டுள்ளது. அதனை மடிக்கும் போது பெறக்கூடிய சதுரமுகியின் சரியான வடிவம்







(1)



(2)



(3)

37. 

அருகில் உள்ள உருவில் இனங்காணக்கூடிய முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

1) 6 2) 8

3) 9

38. சரியான எழுத்துக் கூட்டப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

1) மாணவர்கள் முன்னேற்றமடைவதற்கு முயர்ச்சி அவசியம்.

2) மாணவர்கள் முன்நேற்றமடைவதற்கு முயற்சி அவசியம்.

3) மாணவர்கள் முன்னேற்றமடைவதற்கு முயற்சி அவசியம்.


➢ **தரப்பட்டுள்ள கட்டங்களினுள் இலக்கங்கள் ஒரு குறித்த கோலத்திற்கேற்ப இடப்பட்டுள்ளன. அதற்கேற்ப**

39. எழுத்து A எழுதப்பட்டுள்ள அடைப்பிற்குப் பொருத்தமான எண் யாது?

1) 2

2) 3

3) 4



40. எப்போதும் உண்மையாக இருக்கும் கூற்றாக அமைவது

1) வானவில்லில் நீலம், கருநீலம் ஆகிய நிறங்கள் உள்ளன.

2) கொரோனா தொற்று ஏற்படுபவர் நிச்சயம் மரணிப்பார்.

3) மஞ்சள் நிறத்தையும் சிவப்பு நிறத்தையும் சேர்க்கும்போது கடுஞ்சிவப்பு நிறம் உண்டாகும்.

www.lkedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

நிகழ்நிலைப் பரீட்சை – 05

வினாத்தாள் - II

சுட்டெண் :-	தரம் - 5	நேரம் : 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

மாணவர்களைப் பாடசாலைக்குத தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத் தாளிலேயே எழுதுக.(சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன)
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும். (பயன்படுத்தவும்)

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
மதிப்பீட்டு புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/II/T

www.ikeduk.lk

01. பின்வரும் பந்தியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடையினை எழுதுக.

சூரியனின் பொன்மயமான ஒளிக்கதிர்கள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அதனுடைய வெளிச்சம் மெல்ல மெல்ல அடிவானத்திலிருந்து எழுந்தது. அது தான் எல்லா மிருகங்களையும் நித்திரை விட்டெழச் செய்யும் அறிவித்தல். அன்று மிருகங்களும் அதன்படி நித்திரை விட்டெழுந்து காலைச் சூரியனை வரவேற்றன. ஒரு புதிய நாளும் பிறந்தது. அந்தப் புதிய நாளுடன் மிருகங்களும் அன்றைய வாழ்க்கையை ஆரம்பித்தன.

1) பெயரடைமொழிச் சொல்லை எழுதுக. .....
2) அடுக்குமொழிச் சொல்லை தெரிந்து எழுதுக. .....
3) பழைய என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. .....
4) துயில் என்பதன் ஒத்தபதத்தைத் தரும் சொல் எது? .....
5) பந்தியில் இடம்பெறும் காலப்பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக. .....
6) அ.்றிணை ஒருமை இறந்தகால வினைச்சொல்லை எழுதுக. .....

02. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

குதூகலமாக / சிறுவர் / சிறுவர்கள் / இருந்தனர் / தினத்தன்று

.....

03. பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

வண்ணத்துப்பூச்சியே உனது பூர்வீகம் பற்றிக் கூறுவாயா என்று கேட்டாள்

04. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1) ஆய்வு கூடத்தில் நுண்ணங்கிகள் பற்றிய ..... இடம் பெற்றது. (ஆராச்சி , ஆராய்ச்சி)
2) நான் மழை பெய்யும் போது சூடான ..... பருகினேன். (தேனீர், தேநீர்)

05. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி "✓" எனவும் பிழையாயின் பிழை "X" எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

1) 'நாங்கள்' என்பது தன்மைப் பன்மை வினைச்சொல். ( )
2) 'வந்தார்கள்' என்பது உயர்திணைப் பன்மை வினைச்சொல். ( )
3) 'மரங்கள்' என்பது அ.்றிணை பன்மை பெயர்ச்சொல். ( )
4) 'வருகிறது' என்பது நிகழ்கால ஒருமை வினைமுற்று. ( )

06. 1) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

போதும் என்ற மனமே ..... மருந்து.

2) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

தீமை செய்தால் தீமை வரும் - .....

www.lkedu.lk

07. பின்வரும் தொடர் மொழிக்களுக்குரிய ஒரு மொழியை எழுதுக.

ஒரே சமயத்தில் நூறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தோன்.

.....

08. உள்ளீட்டு மரபுப் பெயர்ச்சொல்லை எழுதுக.

மாம்பழம் - .....

09. சுருக்கக் குறியீட்டின் விரிவினை எழுதுக.

இ.போ.ச - .....

10.

வாருங்கள்! அறிவைத் தேடுங்கள்

யாழ்ப்பாணம் சர்வதேச புத்தகக் கண்காட்சி – 2021

காலம் - வைகாசி மாதம் - 12 ஆம் திகதி முதல்

- 18 ஆம் திகதி வரை

இடம் - வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.



அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- புத்தக வியாபாரிகள் சங்கம் -

1) மேலே தரப்பட்ட சுவரொட்டி எதைப்பற்றியது? .....

2) புத்தகக் கண்காட்சி இடம்பெறும் காலவரையறையைக் குறிப்பிடுக. .....


3) சுவரொட்டியை வெளியிட்டோர் யார்? .....

11. தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்கு உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

1) Water - ..... 2) Birds - .....

12. தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக் களிலேயே எழுதுக.

1) 

2) 

....

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

1) my / is / grand father / This - .....

2) The / forest / trees / big / has - .....

14. ''பொல'' என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்லை எழுதுக. .....

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினை தமிழில் எழுதுக.

பஸ் நிலையம் எங்கே? - .....

பொருத்தமான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

16. 59600 எனும் எண்ணுக்கு பிந்திய எண்ணை எழுத்தில் எழுதுக.

.....


17. அறுபத்தொன்பதாயிரத்து நானூற்று முப்பத்தெட்டு எனும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

.....

18. 19 - 10 = ☐ வெற்றுக் கட்டத்தினுள் வரும் எண்ணை உரோம எண்குறியில் எழுதுக.

.....

19. கீழே உள்ள உருவில் 0.6 ஐ (பென்சிலால் அல்லது பேனையால்) நிறம் தீட்டுக.



20. ஒரு தொழிற்சாலையில் தை மாதம் 7698 குழாய்களும் மாசி மாதம் 2212 குழாய்களும் உற்பத்தி செய்யப்பட்டன. இரு மாதங்களிலும் உற்பத்தி செய்யப்பட்ட குழாய்களின் மொத்த எண்ணிக்கை யாது? .....

21. பையொன்றில் 8 அப்பிள்கள் வீதம் 560 அப்பிள்களை பொதி செய்வதற்கு தேவையான பைகளின் எண்ணிக்கை யாது?

22. தொட்டி ஒன்றின் கொள்ளளவு 32*l* ஆகும். அதில் ½ பங்கிற்கு திரவம் உள்ளது. தொட்டியினை நிரப்ப வேண்டுமாயின் இன்னும் எவ்வளவு திரவம் தேவை?

.....


23. மு.ப 9.30 இற்கு ஆரம்பித்த கண்காட்சி ஐந்து மணித்தியாலங்கள் 45 நிமிடங்கள் நடைபெற்றது. கண்காட்சி முடிவடைந்த நேரம் யாது? .....

24.

68		94
45	96	72
54		81

கட்டத்தில் உள்ள எண்களில் ஒன்பதின் மடங்குகளாக அமையும் எண்களை எழுதுக.

.....

25. 

அருகிலுள்ள உருவில் காட்டப்பட்டுள்ள திண்மப் பொருளின் பெயரை எழுதுக.

.....

26. 24m 36cm நீளமான கயிறு ஒன்று நான்கு சமதுண்டுகளாக்கப்பட்டது. ஒரு துண்டின் நீளம் யாது?

.....

27. ஒரு கடையில் வைக்கப்பட்டுள்ள விலைப்பட்டியலின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

பொருள்	அளவு	விலை	
		ரூபாய்	சதம்
வெங்காயம்	1kg	240	00
புளி	1kg	360	00
உள்ளி	250g	75	00
தேயிலை	500g	425	00


விலைப்பட்டியலுக்கேற்ப சிட்டையை நிரப்புக.

பொருள்	அளவு	விலை	
		ரூபாய்	சதம்
வெங்காயம்	750g	.....	.....
புளி	2kg	.....	.....
உள்ளி	500g	.....	.....
தேயிலை	1kg	.....	.....

28. உருவிற்கு உள்ள சமச்சீர் அச்சுக்களை வரைக.



29. அருகிலுள்ள தகவல்களைக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.



1) காலியிலிருந்து புத்தளம் 258km காலியிலிருந்து கொழும்பு 116km புத்தளத்திலிருந்து களுத்துறை 185km ஆகும். கொழும்பிலிருந்து களுத்துறை வரையான தூரம் யாது?

.....

2) காலியிலிருந்து களுத்துறை வரையான தூரம் யாது?

.....

www.lkedu.lk

30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கோடிடுக.

30. இலங்கையின் தேசியக் கொடி கமிட்டி, தேசிய கீதக் கமிட்டி ஆகியவற்றில் அங்கத்தவராக இருந்தவர்
1) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 2) ஆதர்.சி.கிளாக்
3) கலாநிதி ரீ.பீ. ஜாயா

31. இலங்கை நாட்டிற்கே உரித்தான தாவரம் எது?
1) தேக்கு 2) பெரும்பிரம்பு 3) வேம்பு

32. மண்ணை வளமாக்கி விவசாயிக்கு உதவும் பிராணி
1) மரவட்டை 2) நரான் 3) மண்புழு

33. காற்றின் மூலம் பரம்பலடையும் வித்துக்களை மாத்திரம் கொண்டமைந்த விடை
1) புலிநகம், நாயுருவி, எண்ணெய் 2) மரமுந்திரி, எருக்கலை, தாமரை
3) எருக்கலை, அச்சி, சீதேவியார் செங்கழுநீர்

34. நீரிழிவு நோயை கட்டுப்படுத்துவதற்கு உகந்த உணவு அல்லாதது?
1) பாண் 2) பயறு 3) கௌபி

35. பூக்காத தாவரமாக அமைவது
1) பன்னம் 2) கார்னேசியா 3) போகன்விலா

36. ஆக்கபூர்வமாக கூடமைக்கும் திறன் கொண்ட பறவை எது?
1) தச்சன்குருவி 2) தேன்குருவி 3) மரங்கொத்தி

37. தேசப்படத்தில் புகையிரதப் பாதைகள் காட்டப்படும் நியம நிறம் எது?
1) சிவப்பு 2) கறுப்பு 3) மஞ்சள்

38. இலங்கை அரச இலச்சினையில் பூவிதழ்களால் குறித்துக் காட்டப்படுவது எது?
1) தூய்மை 2) தன்னிறைவு 3) சௌபாக்கியம்

39. இளஞ்சிவப்பு நிறத்தளிர்களை உருவாக்கும் தாவரமாக அமைவது
1) மாமரம் 2) நாகமரம் 3) வேப்பமரம்

40. சூரிய நமஸ்காரத்தின் ஒத்த செயற்பாட்டைக் கொண்ட படிநிலைகளாக அமைபவை எது?
1) 3ஆம், 4ஆம் படிகள் 2) 2ஆம், 11ஆம் படிகள் 3) 4 ஆம், 9 ஆம் படிகள்

41. மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டின் படிமுறைகள் எத்தனை?
1) பன்னிரண்டு 2) ஐந்து 3) பதின்மூன்று

42. சிகிரியா அமைந்துள்ள மாகாணமாக அமைவது
1) மாத்தளை 2) வடமேல் மாகாணம் 3) மத்திய மாகாணம்

www.lkedu.lk


43. புவிக்கு மிக அண்மையிலுள்ள கோளாக அமைவது எது?
1) வெள்ளி 2) புதன் 3) வியாழன்

44. கடதாசியை மடித்து செய்யப்படும் ஆக்கத்திற்கு வழங்கப்படும் பெயர்
1) அல்பனா 2) ஒரிகாமி 3) கொலாஜ்

45. 
இவ் உபகரணத்தைப் பயன்படுத்தும் தொழிலாளர் யார்?
1) தையல் வேலை செய்பவர்
2) குயவன்
3) கொத்தான்

46. எமது நாட்டில் திறந்த தபால் ஒன்றை அனுப்புவதற்கான முத்திரைக் கட்டணமாக அமைவது
1) ரூபாய் 10.00 2) ரூபாய் 12.00 3) ரூபாய் 45.00

47. வண்ணத்துப்பூச்சிகள் முட்டைகளை இடுவது
1) தாவரத் தண்டுகளில் 2) தாவர இலைகளின் கீழ் 3) தாவர கிளைகளில்

48. 

அருகில் காட்டப்படுவது எவ்வகைக் காந்தமாகும்
1) பரியிலாடக் காந்தம்
2) சட்டக்காந்தம்
3) வட்டக்காந்தம்

49. இலங்கையை முதன் முதலில் ஆட்சி செய்த வெளிநாட்டவர் யார்?
1) ஒல்லாந்தர் 2) ஆங்கிலேயர் 3) போர்த்துக்கேயர்

50. தரமான பண்டங்கள் என்பதை உறுதிப்படுத்தி சர்வதேச ரீதியாக வழங்கப்படும் தரச்சான்றாக அமைவது
1) ISO 2) SLS 3) SLDA


51. எலும்பு சார்பான நோய்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமையும் விற்றமின் எது?
1) விற்றமின் A 2) விற்றமின் D 3) விற்றமின் B

52. நீர் மாசடையும் வழிகளில் ஒன்றாக அமையாதது
1) இரசாயனக் கழிவுகள் நீருடன் கலத்தல். 2) நீருக்குள் குளோரின் இடல்.
3) நீரில் தூசுகள் படிதல்.

53. பற்சில்லுகளைக் கொண்டமைந்த ஒரு உபகரணமாக அமைவது எது?
1) தையல் இயந்திரம் 2) நெல்குற்றும் இயந்திரம் 3) கடிகாரம்

54. புகையிரத போக்குவரத்தினால் எமக்குக் கிடைக்கும் அனுகூலம் அல்லாதது
1) குறைவான கட்டணம் 2) விரைவாகப் பயணிக்கலாம்
3) விரும்பிய இடங்களில் இறங்கலாம்.

www.lkedu.lk

55. 

அருகிலுள்ள உபகரணத்தின் பெயர் யாது?

1) காற்றுத்திசைகாட்டி
2) காற்று விசைமானி
3) பாரமானி

56. 

அருகிலுள்ள வீதிச்சமிக்ஞைக் குறியீடு குறிப்பது


1) முன்னால் பாதை வேலை
2) முன்னால் பாதசாரி கடவை
3) முன்னால் சிறுவர் கடவை

57. சிவப்பு நிறத்தையும் நீல நிறத்தையும் கலப்பதால் கிடைக்கும் நிறம்

1) செம்மஞ்சள் 2) ஊதா 3) இளஞ்சிவப்பு

58. தூய நீரின் இயல்பாக அமையாதது

1) நிறமுடையது 2) சுவையற்றது 3) மணமற்றது

59. 

அருகில் காட்டப்பட்டுள்ள செயற்பாடு நடைபெறும் நாளாக அமைவது

1) பௌர்ணமி
2) அமாவாசை
3) சித்திரைப் புத்தாண்டு

60. "இலங்கையின் இயற்கை எழில்" என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1) .....
.....
2) .....
.....
3) .....
.....

www.lkedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

நிகழ்நிலைப் பரீட்சை – 05

தரம் - 5 | **புள்ளித்திட்டம்**

வினாத்தாள் I (விடைகள்)

01. 2	02. 3	03. 1	04. 2
05. 1	06. 1	07. 1	08. 3
09. 2	10. 2	11. 3	12. 2
13. 3	14. 2	15. 3	16. 1
17. 2	18. 2	19. 1	20. 1
21. 1	22. 2	23. 2	24. 1
25. 3	26. 1	27. 2	28. 1
29. 2	30. 2	31. 1	32. 1
33. 3	34. 3	35. 1	36. 2
37. 2	38. 3	39. 3	40. 1

வினாத்தாள் II (விடைகள்)

01. 1) புதிய
2) மெல்ல மெல்ல
3) புதிய
4) நித்திரை
5) காலை / நாள்
6) பிறந்தது (6 புள்ளிகள்)

02. சிறுவர்கள் சிறுவர் தினத்தன்று குதூகலமாக இருந்தனர். (1 புள்ளி)

03. வண்ணத்துப்பூச்சியே! உனது பூர்வீகம் பற்றிக் கூறுவாயா, என்று கேட்டாள். (1 புள்ளி)

04. 1) ஆராய்ச்சி
2) தேநீர் (2 புள்ளிகள்)

05. 1) x 2) ✓
3) ✓ 4) ✓ (4 புள்ளிகள்)

www.lkedu.lk

06. 1) பொன் செய்யும்
2) அடாது செய்வார் படாது படுவார். (2 புள்ளிகள்)

07. சதாவதானி (1 புள்ளி)

08. சதை (1 புள்ளி)

09. இலங்கை போக்குவரத்துச்சபை (1 புள்ளி)

10. 1) யாழ்ப்பாணம் சர்வதேச புத்தகக் கண்காட்சி பற்றியது.
2) 12.05.2021 தொடக்கம் 18.05.2021 வரை / 12 ஆந் திகதி முதல் - 18ம் திகதி வரை
3) புத்தக வியாபாரிகள் சங்கம் (3 புள்ளிகள்)

11. 1) நீர்
2) பறவைகள் (2 புள்ளிகள்)

12. 1) Root
2) Carrot (2 புள்ளிகள்)

13. 1) This is my grand father.
2) The forest has big trees. (2 புள்ளிகள்)

14. சந்தை (1 புள்ளி)

15. பஸ் நவதும் பொல கொஹேத? (1 புள்ளி)

16. ஐம்பத்தொன்பதாயிரத்து அறுநூற்று ஒன்று. (2 புள்ளிகள்)

17. 69 438 (2 புள்ளிகள்)

18. ix (2 புள்ளிகள்)

19. ஏதாவது 6 சிறிய முக்கோணிக்கு நிறந்தீட்டுக. (2 புள்ளிகள்)

20. 9910 (2 புள்ளிகள்)

21. 70 பைகள் (2 புள்ளிகள்)

22. 16*l* / 16 லீற்றர் (2 புள்ளிகள்)

23. பி.ப 3.15 (2 புள்ளிகள்)

24. 45 , 54 , 72 , 81 (2 புள்ளிகள்)

www.lkedu.lk

25. கனவுரு (2 புள்ளிகள்)


26. 6m 9cm (2 புள்ளிகள்)

27.

பொருள்	அளவு	விலை	
		ரூபாய்	சதம்
வெங்காயம்	750g	180	00
புளி	2kg	720	00
உள்ளி	500g	150	00
தேயிலை	1kg	850	00

(4 புள்ளிகள்)

28.



(2 புள்ளிகள்)

29. 1) 43km (2 புள்ளிகள்)

2) 73km (2 புள்ளிகள்)

30.	3	41.	2	51.	2
31.	2	42.	3	52.	2
32.	3	43.	1	53.	3
33.	3	44.	2	54.	3
34.	1	45.	1	55.	1
35.	1	46.	2	56.	1
36.	1	47.	2	57.	2
37.	2	48.	2	58.	1
38.	1	49.	3	59.	2
39.	2	50.	1		
40.	2				

(30 x 1 = 30 புள்ளிகள்)

60. எழுவாய், பயனிலைத் தொடர்புகளுடன் ஐந்து சொற்களுக்கு மேற்பட்டதாக இருப்பின் புள்ளிகள் வழங்குக.

* வாக்கியத்தில் ஓர் எழுத்துப்பிழை மட்டும் இருப்பின் ஒரு புள்ளி வழங்கவும். அதற்கு மேல் பிழை எனின் புள்ளி வழங்க வேண்டாம்.
* உறுப்பமையவும் தெளிவாகவும் இருப்பின் முழு வினாத்தாளையும் கருத்திற் கொண்டு 2 புள்ளிகள் வழங்குக.

www.lkedu.lk